# சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
## வாரப் பாடசாலை

பாடம் - பொருளியல்

வாரம் - 03

தரம் - 12

தயாரிப்பு : திரு. S. வசந்தமூர்த்தி
இ/ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்

**தேர்ச்சி 01 :** பொருளாதார முறைமையொன்றில் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கும் மாற்று முறைகளை நுணுக்கமாக விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.3 :** உற்பத்திக் காரணிகளின் பண்புகளை இனங்கண்டு உற்பத்திக் காரணிகளின் விளைதிறனைத் தீர்மானிக்கும் காரணிகளை விபரிப்பார்.

---

**உற்பத்திக் காரணிகள்** என்பது, உற்பத்திகளை மேற்கொள்ளப் பயன்படும் அடிப்படை காரணிகளே உற்பத்திக் காரணிகள் ஆகும். **அவையாவன :** நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் முயற்சியாண்மை

இவற்றில் நிலம், மூலதனம் என்பன ஆதன / பௌதீக வளமாக உள்ளன. மாறாக உழைப்பு, முயற்சியாண்மை என்பன மனித வளமாக உள்ளன.

**நிலம் :** இயற்கையினால் வழங்கப்படும் வினைத்திறனுடைய உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்கு முடியுமான இயற்கை வளங்கள் நிலம் என்று கருதப்படும். உதாரணம் - வனவளம், கனிய வளங்கள்

**உழைப்பு :** பொருள், சேவை உற்பத்திக்குப் பயன்படும் எல்லா வகையான உடல், உள ரீதியான சக்தி உழைப்பு என அழைக்கப்படும்.

**மூலதனம் :** உற்பத்திக்காக மனிதனால் உருவாக்கப்பட்ட நீண்டகால பாவனையுடையவையும் பெறுமானத்தேய்வுக்கு உட்படக்கூடியவையுமான மெய்ச்சொத்துக்களாகும்.
உதாரணம் : கட்டடம், பொறிகள், விமான நிலையங்கள்

**முயற்சியாண்மை :** குறித்த ஒரு பொருளாதாரத்தில் நிலவும் உற்பத்திக் காரணிகளை ஒன்றிணைத்து, உற்பத்திச் செயற்பாட்டை ஒழுங்கமைத்தல், செயற்படுத்தல், ஆபத்தை ஏற்றுக்கொள்ளல், கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளல் முயற்சியாண்மையாகும்.

**பயிற்சிகள் :**

01. ஆக்கச்சாதனங்களை வகைப்படுத்தி சுருக்கமாக விளக்குக.
02. உற்பத்திக் காரணிகளையும் அவற்றுக்கு கிடைக்கும் வெகுமதிகளையும் பட்டியற்படுத்துக
03. உழைப்பு மற்றும் மனிதமூலதனம் ஆகிய எண்ணக்கருக்களை வேறுபடுத்தி விளக்குக.
04. நிதி மூலதனம் எவ்வாறு பண மூலதனத்திலிருந்து வேறுபடுகின்றது என்பதையும், பண மூலதனம் ஏன் பொருளியலில் மூலதனமாக கருதப்படுவதில்லை என்பதையும் விளக்குக.
05. முயற்சியாளனின் அடிப்படைத் தொழிற்பாடுகளில் ஒன்று புதியனவற்றை கண்டுபிடித்தல் ஆகும். புதியன கண்டுபிடித்தலின் பொருளாதார முக்கியத்துவம் யாது?